Chundikuli Branch Library

Y.M.CA

Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | சித்திரை 15 | [28-04-93] | புதன்கிழமை | ஓசை 69

## ஒவ்வொரு 50 செக்கனுக்கும் விபத்தில் ஒருவர் பலி

உலகில் ஏதாவது ஒரு இடத்தில் ஒவ்வொரு 50 செக்கனுக்கும் ஒருவர் வீதி விபத்துக் காரணமாக இறப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு இரண்டு நிமிடத்திற்கும் ஒருவர் வீதம் வீதி விபத்தில் காயமடைகின்றனர். ஆண்டு தோறும் உலகம் முழுவதிலும் சுமார் 7 லட்சம் பேர் வீதி விபத்துக்களில் பலியாகின்றனர். இத்தகவல்கள் உலக சுகாதாரஸ்தாபனம் அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் இவ் வீதிவிபத்துக்கள் அதிகரித்து வருவதாக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது. இவ் வீதிவிபத்துக்களில் காயமடைந்தோரின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடு தீவிரம்: இன்று கலவரம் வெடிக்கலாமென அச்சம்

## வடமராட்சி கடற்பரப்பில் மீனவர் மீது தாக்குதல்

[வடமராட்சி]

வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் ரோந்து சென்ற சிறிலங்கா கடற்படையினர் மீனவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டதில் சில படகுகள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை 4 மணியளவில் ரோந்து சென்று கொண்டிருந்த கடற்படையினர், கடலில் மீனவர்கள் தொழில் செய்துகொண்டிருப்பதைக் கண்டதும் தமது விசைப்படகுகளை கடலில் நங்கூரமிட்டுக் கட்டிவிட்டு மீனவர்கள் மீது கண்மூடித்தனமான முறையில் பீரங்கித் தாக்குதலையும், துப்பாக்கி வேட்டுக்களையும் மாறி மாறி மேற்கொண்டனர்.

சுமார் ஒரு மணித்தியாலமாக இன்பருட்டி, முனை கடற்பகுதியில் கூட்டமாக மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் மீதே கடற்படையினர் தாக்குதலைத் தொடுத்தனர்.

கடற்படையினரின் அகோரத் தாக்குதலைத் தாக்குப்பிடிக்க முடியாத மீனவர்கள் செய்வதறியாத பதற்ற நிலையில் தமது படகுகள், என்ஜின், வலைகள் ஆகியவற்றை கடலில் விட்டுவிட்டு நீந்திக் கரை சேர்ந்தனர். (யோ)

## மன்னார் தீவில் படைதாக்கு சிறுவன் பலி; ஒருவர் காயம்

(மன்னார்)

கடந்த 13ஆம் திகதி மன்னார் தீவினுள் இராணுவத்தினர் நடாத்திய சரமாரியான துப்பாக்கிச் சூட்டினாலும் ஷெல் தாக்குதலினாலும் 10 வயது சிறுவன் ஒருவன் பலியானதாகவும் வேறொருவர் காலிழந்ததாகவும் இப்பகுதி எம். பி ஒருவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

படையினரின் கண்மூடித்தனமான தாக்குதலினால் தமது அலுவலகமும் சிறுசேதம் அடைந்ததாகவும் தனது சாரதியும் வேலையாளும் மயிரிழையில் உயிர் தப்பியதாகவும் இவர் குறிப்பிட்டார்.

மன்னார் தீவில் 40 பேருக்கு 15 லட்சம்ரூபா பெறுமதியான படகுகள் வழங்கப்பட்டன. இதில் ஒரு தமிழருக்கும் படகு வழங்கப்படவில்லை. முஸ்லிம் ஒருவருக்கு மட்டுமே படகு வழங்கப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆயிரக்கணக்கில் படைகள் குவிப்பு

(கொழும்பு)

கொலை செய்யப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத்முதலியின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறவுள்ளதைத் தொடர்ந்து கொழும்பில் பெரும் கலவரம் மூளலாம் என அஞ்சப்படுகின்றது. இதனை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தீவிரமாக்கியுள்ள அரசாங்கம் ஆயிரக்கணக்கான மேலதிக படைகளை கொழும்பிற்கு அனுப்பி வைத்துள்ளது.

கொல்லப்பட்ட லலித் அத்துலத்முதலியின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்கென பல்லாயிரக்கணக்கான மக்கள் தற்பொழுதும் காத்திருப்பதாகவும், இன்று லலித்தின் இறுதிக் கிரியைகள் இடம்பெறும் வேளை, இவர்கள் அரசிற்கெதிரான கலவரங்களில் ஈடுபடலாம் எனவும் அரசாங்கம் அஞ்சுவதாகவும் தெரிகின்றது. தற்பொழுதே அரசிற்கெதிராகக் கோஷமிட்டு இம்மக்கள் கலவரங்களில் ஈடுபடும் பட்சத்தில், பல அனர்த்தங்கள் விளையலாம் எனவும் அது அரசாங்கத்திற்கு மேலும் பாதகமான சூழ்நிலையை உருவாக்கிவிடும் எனவும் அரசு அஞ்சுவதாகத் தெரிகின்றது.

இதன் காரணமாக கலவரங்கள் எதுவும் ஏற்படாமல் தடுப்பதில் அரசாங்கம் தீவிர அக்கறை காட்டுவதாகவும், இதற்கென விசேட கவனம் செலுத்தப்படுவதாகவும் அறியவருகின்றது. இதேவேளை கலவரங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கென ஆயிரக் கணக்கான பொலிசாரும், இராணுவத்தினரும் கொழும்பு வந்து சேர்ந்துள்ளதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

## மீட்புநிதி சேகரிப்பு

இன்றுநல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் மாலை 3மணி தொடக்கம் 4மணிவரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரைகாலமும் மீட்புநிதிக்கடனைச் செலுத்தத் தவறியோர் தமது மீட்புநிதிக் கடனை இக்குறித்த நாளில் செலுத்தமுடியும் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்றுவழமையானநேரத்திற்கு நடைபெறும் எனயாழ் மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## அதிகாரி ஆலோசனைப்படியே பாதுகாப்பு வழங்கவில்லை

### கிருலப்பனை பொலிஸ் அதிகாரி

[கொழும்பு]

கொழும்புசிரேஷ்டபொலிஸ் அதிகாரி தனக்கு வழங்கிய ஆலோசனையின்படியே லலித் அத்துலத்முதலி துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகிய கூட்டத்திற்கு தான்பாதுகாப்பு வழங்கவில்லை என கிருலப்பனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லெஸ்லி நாரம்வில தெரிவித்துள்ளார்.

ஏஜென்சி செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உயர் அதிகாரியின் ஆலோசனையைக் கேட்டு நடக்க வேண்டியது தனது கடமையென்றும் அதற்கு அமையவே தான் அவ்வாறு நடந்து கொண்டதாகவும் அவர்

### பொலிஸ் அதிகாரி

## இன்று மாலை லலித்தின் இறுதிக் கிரியைகள்

(கொழும்பு)

கடந்த 23ஆம் திகதி கிருலப்பனையில் கொலை செய்யப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவரின் இறுதி ஊர்வலம் கொள்ளுப்பிட்டி மெல் வீதியில் இருந்து இன்று பொரளைக் கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

வீட்டில் இருந்து பூதவுடலைத் தாங்கிய ஊர்தி புறப்பட்டு பொரளை கனத்தை மயானத்தை மாலை 5.00 மணிக்கு சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. முக்கியஸ்தர்கள், அரசியல் வாதிகள், குடும்பத்தினரின் இறுதி மரியாதையைத் தொடர்ந்து மாலை 6.00 க்கு அவரின்

னர், கடலில் மீனவர்கள் தொழில் செய்துகொண்டிருப் பதைக் கண்டதும் தமது விசைப்படகுகளை கடலில் நங்கூரமிட்டுக் கட்டிவிட்டு மீனவர்கள் மீது கண்மூடித் தனமான முறையில் பீரங்கித் ரத் தாக்குதலைத் தாக்குப் பிடிக்க முடியாத மீனவர்கள் செய்வதறியாத பதற்ற நிலையில் தமது படகுகள், என்ஜின், வலைகள் ஆகியவற்றை கடலில் விட்டுவிட்டு நீந்திக் கரை சேர்ந்தனர். (யோ)

## மன்னார் தீவில் படைதாக்கு சிறுவன் பலி; ஒருவர் காயம்

(மன்னார்)

கடந்த 13ஆம் திகதி மன்னார் தீவினுள் இராணுவத்தினர் நடாத்திய சரமாரியான துப்பாக்கிச் சூட்டினாலும் ஷெல் தாக்குதலினாலும் 10 வயது சிறுவன் ஒருவன் பலியானதாகவும் வேறொருவர் காலிழந்ததாகவும் இப்பகுதி எம். பி ஒருவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

படையினரின் கண்மூடித்தனமான தாக்குதலினால் தமது அலுவலகமும் சிறுசேதம் அடைந்ததாகவும் தனது சாரதியும் வேலையாளும் மயிரிழையில் உயிர் தப்பியதாகவும் இவர் குறிப்பிட்டார்.

மன்னார் தீவில் 40 பேருக்கு 15 லட்சம்ரூபா பெறுமதியான படகுகள் வழங்கப்பட்டன. இதில் ஒரு தமிழருக்கும் படகு வழங்கப்படவில்லை. முஸ்லிம் ஒருவருக்கு மட்டுமே படகு வழங்கப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சுமண- 2 படை நடவடிக்கை 5 இராணுவம் காயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு தொப்பிகல காட்டுப் பகுதியில் சுமண - 2 இராணுவ நடவடிக்கையில் ஈடுபடடுள்ள இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் மோதல்கள் இடம்பெற்றதாக கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று அறிவித்தது. இம் மோதலில் 5 படையினர் காயமடைந்ததாகவும் அது மேலும் தெரிவித்தது.

## 50,000 ரூபா கொள்ளையிட கைக்குண்டு வீச்சு

### இராணுவச் சிப்பாய் கைது

கைக்குண்டு வீசி நபர் ஒருவரிடமிருந்து 50 ஆயிரம் ரூபா பணத்தைச் சூறையாடியது சம்பந்தமாக ஓர் இராணுவச் சிப்பாய் உட்பட ஐவர் பொலிஸாரால் மாத்தறையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைக்குண்டு வெடித்த இடத்தைப் பார்வையிட்ட பொலிஸார் அங்கு எம் 75ரகக் குண்டு வெடிக்கப் பட்டிருந்ததாகவும் அது இராணுவத்துக்கு உரிய குண்டு என்று கண்டுபிடித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்களுள் ஒருவர் பலாலி இராணுவ முகாமில் கடமையாற்றி வந்தவர் என்றும், அவர் நான்கு மாதங்களுக்கு முன்னர் விடுமுறையில் வந்திருந்தவர் என்றும் அவர் வரும்போது கிரனைட்டை எடுத்து வந்திருக்கிறார் என்றும் பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

அஞ்சலி செலுத்துவதற்கென பல்லாயிரக்கணக்கான மக்கள் தற்பொழுதும் காத்திருப்பதாகவும், இன்று லலித்தின் இறுதிக் கிரியைகள் இடம்பெறும் வேளை, இவர்கள் அரகம் அஞ்சுவதாகவும் தெரிகின்றது. தற்பொழுதே அரசிற்கெதிராகக் கோஷமிட்டு இம் மக்கள் கலவரங்களில் ஈடுபடும் பட்சத்தில், பல அனர்த்தங்கள் விளையலாம் எனவும் உருவாக்கிவிடும் எனவும் அரசு அஞ்சுவதாகத் தெரிகின்றது.

இதன் காரணமாக கலவரங்கள் எதுவும் ஏற்படாமல் தடுப்பதில் அரசாங்கம் தீவிர அக்கறை காட்டுவதாகவும், இதற்கின்றது. இதேவேளை கலவரங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கென ஆயிரக் கணக்கான பொலிசாரும், இராணுவத்தினரும் கொழும்பு வந்து சேர்ந்துள்ளதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

# அதிகாரி ஆலோசனைப்படியே பாதுகாப்பு வழங்கவில்லை

## கிருலப்பனை பொலிஸ் அதிகாரி

[கொழும்பு]

கொழும்புசிரேஷ்டபொலிஸ் அதிகாரி தனக்கு வழங்கிய ஆலோசனையின் படியே லலித் அத்துலத்முதலி துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகிய கூட்டத்திற்கு தான்பாதுகாப்பு வழங்கவில்லை என கிருலப்பனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லெஸ்லி நாரம்வில தெரிவித்துள்ளார்.

ஏஜென்சி செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உயர் அதிகாரியின் ஆலோசனையைக் கேட்டு நடக்க வேண்டியது தனது கடமையென்றும் அதற்கு அமையவே தான் அவ்வாறு நடந்து கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பொலிஸ் அதிகாரி களுத்துறைக்கு இடமாற்றம்

கிருலப்பனை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி லெஸ்லி நாரம்வில களுத்துறை பொலிஸ்நிலையத்திற்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டார்.

கிருலப்பனையில் கடந்த 23-ம் திகதி நடைபெற்ற ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கூட்டத்திற்கு பாதுகாப்பு வழங்கத் தவறியதற்காகவே இவ் இடமாற்றம் வழங்கப்பட்டதென பொலிஸ் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. இக்கூட்டத்திலேயே லலித் அத்துலத் முதலி சுட்டுக்கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## நூற்றுக்கணக்கான பொலிஸ் கொழும்பில் குவிப்பு

லலித் அத்துலக் முதலியின் இறுதி ஊர்வலத்தின் போது அசம்பாவிதங்கள் நடக்கலாம் என எதிர்பார்த்து முன்னேற்பாடாக பல நூற்றுக் கணக்கான பொலிசார் கொழும்புக்கு வரவழைக்கப் பட்டுள்ளனர்.

இதேவேளை கலவரம் அடக்கும் பொலிசார் எந்த நேரமும் உசார் படுத்தப்பட்ட நிலையில் முக்கிய சந்திகளில் நிறுத்தப்பட்டு இருப்பதாக தெரிய வருகின்றது.

## அமைதியைப் பேணுமாறு மக்களிடம் கோரிக்கை

(கொழும்பு)

அரசியல் தலைவருக்கு கொடுக்கும் உரிய மரியாதையுடன் அத்துலத் முதலியின் இறுதிச் சடங்குகள் அமைதியாக நடைபெற உதவும்படி நாட்டு மக்கள் அனைவரும் தலைமைத்துவத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென எதிர்க் கட்சிகளின் கூட்டணி நேற்று முன்தினம் கொழும்பில் வெளியிட்ட கூட்டு அறிக்கை ஒன்றில் கேட்டுள்ளது.

### கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்றுவழமையானநேரத்திற்கு நடைபெறும் எனயாழ் மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## இன்று மாலை லலித்தின் இறுதிக் கிரியைகள்

(கொழும்பு)

கடந்த 23ஆம் திகதி கிருலப்பனையில் கொலை செய்யப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவரின் இறுதி ஊர்வலம் கொள்ளுப்பிட்டி மெல் வீதியில் இருந்து இன்று பொரளைக் கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

நண்பகல் 2 30 மணிக்கு மெல் வீதியிலுள்ள அவரது வீட்டில் இருந்து பூதவுடலைத் தாங்கிய ஊர்தி புறப்பட்டு பொரளை கனத்தை மயானத்தை மாலை 5. 00 மணிக்கு சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. முக்கியஸ்தர்கள், அரசியல் வாதிகள், குடும்பத்தினரின் இறுதி மரியாதையைத் தொடர்ந்து மாலை 6. 00 க்கு அவரின் சிதைக்கு தீயிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

### ஸ்கொட்லண்ட்யார்ட் அழைப்பு

# மக்களை ஏமாற்றும் அரசின் முயற்சி

(கொழும்பு)

''இந்த நாடு முடிந்துவிட்டது. அவ்வளவு தான் எமது நாட்டில் ஜனநாயகம் இல்லை. லலித்தின் இறப்பால் பிரேமதாசாவுக்கும் ஐ.தே.கவிற்கும் லாபம்''. இவ்வாறு லலித் அத்துலத் முதலியின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த காத்திருந்த சிங்கள பொது மகன் ஒருவர் பி.பி. ஸிக்கு தெரிவித்தார்.

லலித் கொலை தொடர்பாக விசாரிக்க ஸ்கொட்லண்ட்யார்ட் அழைக்கப்பட்டதுஏமாற்று முயற்சி. ஏற்கனவே பல விசாரணை குழுக்கள் பல சந்தர்ப்பங்களில் அமைக்கப்பட்டன. ஆனால் இவை ஒன்றின் முடிவுதானும் வெளிவரவில்லை. எனவே இதுவும் ஓர் ஏமாற்று முயற்சியே எனமற்றொருவர் கருத்துக் கூறினார்.

அரசுக்கெதிரான வீரியமிக்க அரசியல்வாதி இனி உயிர் தப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஸ்கொட்லண்ட்யார்ட் விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

லலித் கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென கொழும்பு வந்த ஸ்கொட்லண்ட்யார்ட் குழுவினர் நேற்று தமது விசாரணைகளை ஆரம்பித்தனர்.

கொலை நடைபெற்ற கிருலப்பனை பகுதிக்கும் இக்குழுவைச் சேர்ந்த நான்கு பேரும் சென்று பூர்வாங்க விசாரணைகளைநடாத்தினர்.

பின்னர் அவர்கள் சடலமாக மீட்கப்பட்ட இளைஞனின் உடல் காணப்பட்ட இடத்தையும் சென்று பார்த்தனர்.

மேலதிக விசாரணைகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை

[ 4 ஆம் பக்கம் பார்க்க]

### கவிழும் நிலையில் தமிழக அரசு

# பலஅ.தி.மு.க.உறுப்பினர்கள் காங்கிரசுடன் சேர முயற்சி

(சென்னை)

தமிழகத்தில் அ. தி. மு. க. ஆட்சி ஆட்டம் கண்டுள்ளதாக பி. பி. ஸியின் சென்னை செய்தியாளர் தனது விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளார். ஜெயலலிதாவின் பதவிக்கு ஆபத்து வந்துள்ளது என்பதை அறிந்த அ. தி. மு. க. சட்டப் பேரவை உறுப்பினர்கள் நிலைகுலைந்துபோயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் அரைப் பங்கினராவது அ. தி. மு. கவிலிருந்து பிரிந்து தனிக்குழுவாக செயற்பட்டு காங்கிரசுடன் இணைந்து கூட்டு அரசு ஒன்றை அமைக்க எண்ணியுள்ளதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

## திருமலை- கொழும்பு வீதியில் விகாரைகள் அமைப்பு

[திருமலை]

தென் தமிழீழப் பகுதியில் சிறிலங்கா அரசாங்கம் அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் குடியேற்றங்கள் தீவி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### லலித் கொல்லப்படுமுன்

## திருமதி லலித்திற்கு அநாமதேயத் தொலைபேசி

லலித் அத்துலத்முதலி சுடப்படுவதற்குச் சற்று முன்னர் மூன்று அநாமதேயத் தொலைபேசிச் செய்திகள் அவரின் வீட்டிற்கு வந்ததென ராவய பத்திரிகை ஆசிரியர் ஐவன் நேற்று பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

முதலாவது தொலைபேசி அழைப்பின்போது ''திருமதி அத்துலத்முதலிக்குக் கூறவும் குளித்துவிட்டு இருக்குமாறு'' என்று தெரிவிக்கப்பட்டதாகவும், மூன்றாவது தொலைபேசி அழைப்பின்போது 'பிரேதத்தைப் பொறுப்பேற்க குளித்து விட்டுத் தயாராக இருக்கவும்'' என்றும்தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இரண்டு வரிசைகளில் நின்று அஞ்சலி செலுத்தும் மக்கள்

லலித் அத்துலத்முதலியின் பூதவுடலுக்கு நேற்றும் பல்லாயிரக் கணக்கில் மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள். கொள்ளுப்பிட்டி மெல் வீதியில் அமைந்துள்ள அவரின் வீட்டை நோக்கி மக்கள் இரண்டு வரிசையில் செல்வதை காணக்கூடியதாக இருந்தது.

தொழிற்சாலையில் கடமை புரியும் ஊழியர்கள் அவர்களின் தொழிற்சாலை உடையுடன் வந்தனர் என்றும், இறுதி அஞ்சலி செலுத்த வருபவர்களுக்கு பல நிறுவனங்கள் சிற்றுண்டிகளை வழங்குவதாகவும் தெரிய வருகின்றது.

மெல் வீதி முழுவதும் லலித் அத்துலத்முதலிக்கு அஞ்சலி தெரிவிக்கும் பதாகைகள் தொங்கவிடப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

## அரசியல்வாழ்வை முடிக்க எதிரணியினர் சதி

### பிரேமதாசா குற்றச்சாட்டு

எதிர்க்கட்சியினர் என்னை இரு கொலைகளில் மட்டுமே சம்பந்தப்படுத்தாது விட்டுள்ளனர். ஒன்று மகாத்மாகாந்தி கொலை.மற்றது அண்மையில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பிரமுகர் கிறிஸ் ஹானி கொலை என்று கூறியுள்ளார். ஜனாதிபதி பிரேமதாசா கண்டியில் நேற்று மாகாணசபை தேர்தலை முன்னிட்டு ஐ. தே. கவின் ஆரம்ப பிரசாரக் கூட்டத்தில் அவர் பேசும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

ராஜீவ் காந்தி பலியான போதும் எதிர்க்கட்சியினர் என்னைச் சுட்டிக்காட்டினர். என் அரசியல் வாழ்வைமுடிக்க

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தென் மராட்சி வாடிக்கையாளர்கட்கு

எங்களிடம் சகல றேடியோக்கள் ரேப் றெக்கோடர்கள் மற்றும் மின்சார உபகரணங்கள், எலக்ரோனிக் ஓட்டோ மற்றிக் கடிகாரங்கள் மேசை, சுவர் மணிக்கூடுகள் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள நாடுங்கள். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ்3, கண்டி வீதி(இலங்கைவங்கிஅருகாமையில்) சாவகச்சேரி.

(6508)

### சித்திர ஆசிரியர் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பாடசாலைகளில் சித்திர பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று காலை 10-00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதென கோட்ட பிரசிக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

### நன்கொடை கிடைக்கவில்லை

(கொழும்புத்துறை)

கோப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு உள்ளூராட்சித்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அரச நன்கொடைப் பணம் 1992ஆம் ஆண்டுக்கு இன்றுவரை வழங்கப்படவில்லை என அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் பிரதேச உள்ளூராட்சித் திணைக்களத்தால் ஏற்கனவே வழங்கப்பட்ட இந் நன்கொடைப் பணம் இன்றுவரை இப்பகுதிச் சனசமூக நிலையங்களுக்கு வழங்கபடவில்லை என சனசமூக நிலையத்தினர் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர்.

(24)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

முழுநேரப் பட்டப்பின் கல்வித் தகைமை

---

## HARY'S INSTITUTE

*KONDAVIL EAST, KONDAVIL.*

SPOKEN ENGLISH With GRAN MAR

BY

M. A. HARI (B A. Dip in Eng.)

புதிய பிரிவு

**ஆரம்பம்: 30-04-1993**

வெளளி மாலை 4.00 - 5.00

(4767) - நிர்வாகி

---

## 6-ம் ஆண்டு நினைவாக...

மலர்வு: 18 — 01 — 1955 (யாழ்ப்பாணம்)



உதிர்வு: 27 — 04 — 1987 (இங்கிலாந்து)

### செல்வி தேவராணி கந்தையா

(கட்டிடவரை படக்கலைஞர் கட்டுப்பெத்தை வளாகம்)
28, வெலிங்டன் அடை வீதி, திருக்கோணமலை.

அன்பிலெழுந்து ஆடிய பூங்கொடி
அறுந்து விழுந்து ஆறாண்டுகள் ஆனதா?
கண்ணிலாடிய காவியத் திருமகள்
கண்மறைந்து ஆறாண்டுகள் ஆனதா?
விண்ணிடிந்து வீழ்ந்தது போலவே
விந்தையாயிரம் செய்த கலைமகள்
மண்ணைவி டு மறைந்து போகலாம்
மனதைவிட்டு எப்படி மறைவளோ?

அன்பின் நினைவில்
தந்தை, தாய்,
சகோதரர்கள்.

க. தயாளசிங்கம் குடும்பம் (பிரான்ஸ்)
க. நல்லலிங்கம் குடும்பம் (லண்டன்)
க. தேவகுலசிங்கம் குடும்பம் (திருக்கோணமலை)
க. வசந்தகுமார் (லண்டன்)
க. சோதிலிங்கம் (லண்டன்)
க. சற்குணதேவி (திருக்கோணமலை)

சிறியதாயார்
செல்வி சபாபதி தங்கப்பொன் (திருநெல்வேலி)
மற்றும் உறவினர், நண்பர்கள்.

(4763)

## 5-ம் ஆண்டு வீர அஞ்சலி



---

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### ஈராண்டுப்பகுதி நேரப் பட்டப்பின் கல்வித் தகைமை கற்கை நெறி 1992/93 புதிய அனுமதி

அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன தேர்வு நாடிகள் 1993-05 31 இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பங்களைப் பெற விரும்புவோர் நிதிக் கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற்றுச் சீட்டினைக கல்விக்கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளரிம் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

அனுமதிப்பரீட்சை 1993 07-25 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்.

தெரிவு செய்யப்படுவோர் 25 மைல சுற்றாடலில் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கை நெறிக்குப் பதிவுசெய்யும் பொழுது இவ்விடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1993-05-31 ஆம் திகதிக்கு முன் அனுப்புதல வேண்டும்.

பதிவாளர்
யாழ்.பல்கலைக்கழகம்.
1993-04-27

(சி-6513)

---

### தையல் பயிற்சி வகுப்புகள்

(தொல்புரம்)

யாழ். தேசிய சர்வோதயத்தின் சங்கானைப் பிரதேச நிலையத்தில் இலவச தையல் பயிற்சி வகுப்பு நடாத்தப்பட்டு வருகிறது

மேற்படி தையல் பயிற்சி வகுப்பில் வட்டுக்கோட்டை, தொல்புரம், சுழிபுரம், சித்தன்கேணி, சங்கானை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருபத்தைந்திற்கும் மேற்பட்ட பெண்பிள்ளைகளுக்கு தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறதென யாழ். தேசிய சர்வோதயத்தின் சங்கானைப் பிரதேச நிலையப் பொறுப்பாளர் செல்வி கி. யோகேஸ்வரி தெரிவித்துள்ளார்.

மேலும் நிலையப் பொறுப்பாளருடன் சேர்ந்து சர்வோதய மகளிர் அணியைச் சேர்ந்த செல்வி மா. சுகித்திரா அவர்களும் தையல் பயிற்சியை வழங்கி வருகின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(41)

---

யாழ். பல்கலைக்கழக வெளியீடு

விற்பனையாகிறது

### பண்டிதமணியின் பேரும், புகழும்

பேராசிரியர்
சு. சுசீந்திரராசா
எழுதியது

பண்டிதமணி. இலக்கிய கலாநிதி சி கணபதிப்பிள்ளை அவர்களின் ஆக்கங்கள், புலமை ஈடுபாடுகள். இலக்கிய, சமயப் பணிகள் மற்றும் சேவைகள் பற்றி அறிய விழையும் மாணவர்கள், ஆசிரியர்கள், ஆய்வாளர்கள், ஏனைய ஆர்வலர் அனைவருக்கும் இன்றியமையாத சிறந்த நூல்.

இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு.

விலை ரூபா: 90/-

தேவையானோர் நிர்வாகக் கிளை உதவிப் பதிவாளருடன் தொடர்பு கொள்க.

– பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1993-04-26

(சி-6511)

---

உ

தெல்லிப்பழை

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## மணவாளக்கோல திருவிழா

நவோத்திர சகஸ்ா சங்காபிஷேகமும் (1008),
அம்பாள் பூந்தண்டிகையில் வீதி உலாவும்
03-05-1993 திங்கட்கிழமை

காலை 6.00 மணி — பகல் 11.00 மணி வரை (1008) சங்காபிஷேகமும், விசேட பூசையும்.
நண்பகல் 12.30 மணி — அன்னதானம்
மாலை 3.30 மணி — வசந்த மண்டபப் பூசை, திருவூஞ்சல், அம்பாள் பூந்தண்டிகையில் உலாவருதல்
மாலை 6.00 மணி — அர்த்தசாமப் பூசை

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை. – நிர்வாகசபை

(4776)

---

தென் இந்தியத் திருச்சபை – யாழ். பேராயம்

பெண்கள் ஒன்றியம்

## தொழில் பயிற்சி நிலையம்

கிறீன் வைத்தியசாலை வளாகம், மானிப்பாய்
தையல் பயிற்சி, கைப்பணி சமையற்கலை, சிகையலங்காரம் ஆகிய துறைகளில் ஆறுமாத கால இலவச பயிற்சி
(சித்தியடைவோருக்குச் சான்றிதழ் வழங்கப்படும்)

தினமும் மானிப்பாய்க்கு வந்து போகக் கூடிய, பாடசாலைப்படிப்பை முடித்துக் கொண்ட பெண்கள் இப்பயிற்சியில் சேர்ந்து கொள்ளலாம். பதிவு செய்து கொள்வதற்காகவும், நேர்முகத் தேர்விற்காகவும் எதிர்வரும் மே மாதம் 6-ம் திகதி (6-5-93) மாலை 3.30 மணிக்கு மதகுரு மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோரின் சிபார்சுக் கடிதங்களுடன் நேரில் வரவும்.

செயலாளர் பெண்கள் ஒன்றியம்
யாழ் தென்னிந்தியத் திருச்சபை

(4777)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரப்பிறப்பு: 14 — 07 — 1975



வீரச்சாவு: 09 — 05 — 1992

### 2-ம் லெப். கண்ணன்

(நாகலிங்கம் பகீரதன்)

கண்ணின் மணியாம் எம் கண்ணன்–உனை
எண்ணின் எமக்கெலாம் வேதனையே .....
மண்ணின் கதிதனை மாற்ற முனைந்த நீ
விண்ணின் பதியிடம் விரைந்தனையோ?......

கொடைப் பணம் இன்றுவரை இப்பகுதிச் சனசமூக நிலையங்களுக்கு வழங்க படவில்லை என சனசமூக நிலையத்தினர் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர். (24)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

முழுநேரப் பட்டப்பின் கல்வித் தகைமை கற்கை நெறி 1992/93

புதிய அனுமதி

தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வு நாடிகள் 1993. 05. 31இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர், நிதிக்கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற்றுச் சீட்டினைக் கல்விக் கிளையில் சிரேஷ்ட உதவிப்பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

அனுமதிப்பரீட்சை 1993. 07. 25 அன்று பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்களைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1993. 05. 31ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்.
யாழ். பல்கலைக்கழகம்.
1993. 04. 27

[சி-6512]

---

விந்தையாயிரம் செய்த கலைமகள்
மண்ணைவிடு மறைந்து போகலாம்
மனதைவிட்டு எப்படி மறைவளோ?

அன்பின் நினைவில்
தந்தை, தாய்,
சகோதரர்கள்.


க. தயாளசிங்கம் குடும்பம் (பிரான்ஸ்)
க. நல்லலிங்கம் குடும்பம் (லண்டன்)
க. தேவகுலசிங்கம் குடும்பம் (திருக்கோணமலை)
க. வசந்தகுமார் (லண்டன்)
க. சோதிலிங்கம் (லண்டன்)
க. சற்குணதேவி (திருக்கோணமலை)

சிறியதாயார்
செல்வி சபாபதி தங்கப்பொன் (திருநெல்வேலி)
மற்றும் உறவினர், நண்பர்கள்.

(4763)

---

## 5-ம் ஆண்டு வீர அஞ்சலி



## மேஜர் நரேன்

[ஜனார்த்தனன் நல்லைநாதன்]

| தாயின் மடியில்: | தாயக மண்ணில்: |
| --- | --- |
| 24-11-1963 | 28-04-1988 |

நீ வீரத்தின் விளைநிலம் விடுதலையின் விளைநெல் ஈழத்தமிழ்த் தாயின் வைகறை மகனே!

நீ எங்கள் வாழ்க்கையின் வரலாறு அழிக்க முடியாத புனித காவியம். காலத்தின் யாத்திரையிற் காணாமற் போய் விடாத கதாபாத்திரம் குருதிக்களத்தில் குதித்து நீந்தி எதிரிகளின் உடலில் தமிழ் எழுதி வேங்கையாய்ப் பாய்ந்து புரண்டு விளையாடிய காலம் எங்கள் நினைவிற் பொற்காலம். ஆண்டுகள் மறையலாம், அருந்தவப் புதல்வா உன் நீண்ட புகழ் நிலவுலகு வாழும் வரை நிலவும் உனது பிரிவு பிரிக்கமுடியாத இனிய நிலவு!

218/9, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

அப்பா, அம்மா, சகோதரர்,
மாமா, மாமி, நண்பர்கள்.

(4774)

---

நடைபெறும்.

தெரிவு செய்யப்படுவோர் 25 மைல சுற்றாடலில் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கை நெறிக்குப் பதிவுசெய்யும் பொழுது இவ்விடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை சிரேஷ்ட உதவிப்பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1993-05-31 ஆம் திகதிக்கு முன் அனுப்புதல வேண்டும்.

பதிவாளர்
யாழ்.பல்கலைக்கழகம்.
1993-04-27

(சி-6513)

---

பண்டிதமணி. இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் ஆக்கங்கள், புலமை ஈடுபாடுகள். இலக்கிய, சமயப் பணிகள் மற்றும் சேவைகள் பற்றி அறிய விழையும் மாணவர்கள், ஆசிரியர்கள், ஆய்வாளர்கள், ஏனைய ஆர்வலர் அனைவருக்கும் இன்றியமையாத சிறந்த நூல்.

இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு.

விலை ரூபா: 90/-

தேவையானோர் நிர்வாகக் கிளை உதவிப் பதிவாளருடன் தொடர்பு கொள்க.

– பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1993-04-26

(சி-6511)

---

## 5 ஆண்டுகள் உதிர்ந்தகண்ணீர்ப்பூக்கள்



அன்னை மடியில்
மலர்ந்தது
21-8-1972

அரக்கர் பிடியில்
உதிர்ந்தது
28-4-1988

தேசத்துரோகிகளால் அணைக்கப்பட்ட
மாணவ மணிச்சுடர்

செல்வன்

## கதிரேசு முகுந்தன்

எங்கள் கண்ணின் மணியே முகுந்தா!
அன்பிற்கோர் இலக்கணமாய்
அறிவிற்கோர் உதாரணமாய்
உருவத்தில் முழுமதியாய்
உலாவந்த எங்கள் முகுந்த!
தேசத் துரோகிகளின்
பாவக்கரங்களினால்
பாலப் பருவத்தில் படுகொலையுண்டாயே!
ஆண்டு ஐந்து போனாலும்
ஆறுமோ எம் துயரம்
ஆருயிரே முகுந்தாக்குட்டி
அழுகின்றோம் நித்தம் நித்தம்

கணந்தோறும்
உன்நினைவால் கலங்கிவாடும்
அம்மா, அப்பா, அக்கா,
அண்ணா, தங்கை.

இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

(4771)

---



| 14 | 09 |
| --- | --- |
| — | — |
| 07 | 05 |
| — | — |
| 1975 | 1992 |

## 2-ம் லெப். கண்ணன்

(நாகலிங்கம் பகீரதன்)

கண்ணின் மணியாம் எம் கண்ணன்–உனை
எண்ணின் எமக்கெலாம் வேதனையே .....
மண்ணின் கதிதனை மாற்ற முனைந்த நீ
விண்ணின் பதியிடம் விரைந்தனையோ? ......

மீசாலை கிழக்கு.

–குடும்பத்தினர்

(4764)

---

## நினைவு கூருகின்றோம்...
## 1993-04-28

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை- கந்தளாய்ப் பகுதியில் முஸ்லிம் ஊர்காவற் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

கப்டன் குட்டி/தினேஷ் (முகமது அனிபா முகமது ஹாசன் - 1 ம் குடியிருப்பு பேராறு கந்தளாய் - திருமலை)

1988ஆம் ஆண்டு மன்னார் - வெள்ளாங்குளம் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

மேஜர் நரேன் (நல்லைநாதன் ஜனார்த்தனன் - 218, நாவலர் வீதி, யாழ். )

தேசவிரோத சக்திகளினால் படுகொலை செய்யப்பட்ட எமது ஆதரவாளர்கள்.

ஐயம்பிள்ளை கணபதிப்பிள்ளை (வட்டக்கச்சி, கிளிநொச்சி)

மு. சிறீதரன் (இராமநாதபுரம் - கிளிநொச்சி)

1991ஆம் ஆண்டு கிளி - ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்திருந்து யாழ் மருத்துவமனையில் வீரச்சாவெய்திய-

2-ம் லெப். விசுவாசம் (பொன்னுத்துரை சுதாகரன் - இல 81, 2-ம் படிவம், வவுனிக்குளம் - துணுக்காய்)

லெப். ஆனந்தன் (கிருஷ்ணராஜா சந்திரன்- இல 3/1, திருவையாறு - கிளிநொச்சி)

சுவித்/சுஜித் (இராசரட்ணம் சிவசுப்பிரமணியம் - இரத்தினபுரம் - கிளிநொச்சி)

கிளி - ஆனையிறவில் சிறிலங்கா இராணுவம் குறிபார்த்துச் சுட்டதில் வீரச்சாவெய்திய-

றெஜினோல்ட் (பாலசிங்கம் கண்ணன் - புத்தூர் மேற்கு - யாழ். )

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/6510]

### சிந்தனைக்கு

அண்டை வீட்டுக்காரனின் வேலி பற்றி எரியும் போது அது உன் வீட்டு வேலையாகி விடுகின்றது.

—ஹோரஸ் —


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 28-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


## சிங்கள மக்களுக்கு புரியவேண்டியவை பல

சிங்கள மக்கள் இன்று காலம் கடந்து சில கேள்விகளைக் கேட்கின்றார்கள். சில விடயங்களை உணரத் தலைப்பட்டுள்ளனர். லலித்தின் கொலையைத் தொடர்ந்து அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தொலைக்காட்சி உட்பட தொலைத் தொடர்பு சாதனங்கள் மீதும், மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் மீதும் அவர்கள் காட்டியுள்ள வெறுப்புணர்ச்சி இதனையே காட்டுவதாகவுள்ளது.

நாய்க்கு எப்பகுதியில் அடிபட்டாலும் அது காலைத் தூக்குவது போல் கடந்த காலத்தில், அரசிற்கு எதிரான அல்லது சிங்களவரைப் பாதிக்க கூடிய எது இடம்பெற்றாலும் சிறிலங்கா அரசாங்கமும், அதன் கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் தொடர்பு சாதனங்களும் விடுதலைப் புலிகளே அதற்குக் காரணம் எனக் கூறுவது வழமையானதொரு அம்சமாகும். இதில் கேள்வி என்பதற்கு இடம் ஏதும் இருப்பதில்லை. அரச கட்டுப்பாட்டில் இல்லாத பத்திரிகைகள் பேரினவாத சிந்தனையை மட்டுமே நோக்கமாகக்கொண்டுள்ளமையால், அதனை முழுமையாக ஏற்றுக்கொண்டன.

இதன் அடிப்படையில் சிறிலங்கா இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட பச்சிளம் பாலகர்களில் இருந்து தள்ளாடும் வயதிலிருந்த முதியோர்கள் வரை அரசால் படுகொலை செய்யப்படும் போது அவர்கள் 'புலிகளாகவும்' ''பயங்கரவாதிகளாகவும்'' மாறினர். அரச இராணுவம் செய்த, செய்கின்ற அழிவு வேலைகள் யாவற்றிற்கும், 'புலிகளே' பொறுப்பு எனவும் கூறப்பட்டது.

இதேபோன்றே பொலிசாரும், இராணுவத்தினரும் மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் அறிக்கையையும் எதுவித சிந்தனையற்று வெளியிட்டும் வந்தனர். இலங்கையில் அரசிற்கு எதிராக என்ன சம்பவம் இடம் பெற்றாலும் அதற்குக் காரணம் புலிகளே என்ற பதில் அவர்களிடம் ஆயத்தமாகவே இருந்தது. இக்குற்றச்சாட்டில் உள்ள பெரும் ஓட்டைகள் எவையும் பற்றி அவர்கள் எப்பொழுதுமே சிந்திக்கவில்லை.

அதாவது லலித்தின் கொலையுடன் சந்தேகப்

# ராணிப்பேட்டை தொகுதிக்கு இடைத் தேர்தல் ரத்து

## -தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

இராணிப்பேட்டை சட்டப் பேரவை தொகுதிக்கான இடைத்தேர்தல் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக தேர்தல் கமிஷன் நேற்று அறிவித்தது. தேர்தல் விதிமுறைகளுக்கு முரணான விதத்தில் தமிழக அரசு நடந்து கொண்டு இருப்பதாலேயே இந்த இடைத்தேர்தல் ரத்துச்செய்யப்பட்டமைக்கான காரணமாகும் என்றும் தேர்தல் கமிஷன் மேலும் கூறியுள்ளது.

தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்ட பின்னர் தமிழக அரசு 500 கோடி ரூபா பெறுமதிக்கான அபிவிருத்தித் திட்டங்களை தொடங்கி வைத்திருப்பதும், தென் ஆற்காடு மாவட்டத்தை இரண்டாக பிரிப்பதாக சட்டப்பேரவையில் அறிவித்திருந்ததும், தேர்தல் விதிமுறைகளுக்கு முரணானதாகும் என்று தேர்தல் கமிஷன் தெரிவித்துள்ளது.

இந்த வேளையில் இராணிப்பேட்டை தொகுதியில் அபிவிருத்தி திட்டங்கள் தொடங்கப்பட்டது ஏன் என்று தேர்தல் கமிசன் கோரியபோது தமிழக அரசு பதில் தரவில்லை என்றும், தேர்தல் விதிமுறைகளை வேண்டுமென்றே தமிழக அரசு அப்பட்டமாக மீறியுள்ளது என்றும், தேர்தல் கமிஷன் சுட்டிக்காட்டியிருப்பதுடன் இவற்றை தேர்தல் கமிஷன்வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்றும்தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

## அறையில் 4 வருடம் சடலமாகக் கிடந்தார்

(வியன்னா)

மாடிக்கட்டடத்தில் குடியிருப்பாளர் ஒருவர் நீண்ட காலமாக வாடகைப் பாக்கியை செலுத்தாது இருந்ததால் அதை வசூலிக்கச் சென்ற அதிகாரி ஒருவர் அவரது பிணத்தையே கண்டார்.

இறந்து நான்கு வருடங்களாகியும் குடியிருப்பாளரின் உடல் அவரது படுக்கையில் போர்வைக்கடியில் அப்படியே கிடந்தது.

தளபாடங்களை அகற்றிகுடியிருப்பாளரை வெளியேற்றுமுகமாகவே இந்த அதிகாரி சென்றார்.

1989ஆம் ஆண்டு ஜூலை மாதம் இறந்ததாக அங்கிருந்த தஸ்தாவேஜுக்களில் விவரம் காணப்பட்டது. பலாத்காரம் ஏற்பட்டதிற்கான அறிகுறிகள் அங்கு காணப்படவில்லை என தெரியவருகிறது.

## மசூதி அருகே காஷ்மீரில் மோதல்

காஷ்மீரில் மிகப் புனித மசூதி ஒன்றை இந்திய ராணுவத்தினர் முற்றுகையிட்டு அங்கிருந்த தீவிரவாதிகளுடன் கடும் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டனர். 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்த மசூதியினுள் தீவிரவாதிகள் நுழைந்துள்ளதாக கிடைத்த தகவலையடுத்து இந்திய ராணுவம் மசூதியை சுற்றி வளைத்தது.

அதே சமயம் அருகிலிருந்த கட்டடங்களிலிருந்து தீவிரவாதிகள் சுட்டதில் படையினர்சிலர் காயமடைந்தனர்.

உள்ளிருந்த தீவிரவாதிகளை இராணுவம் இலகுவாக பிடித்திருக்க முடியும். ஆனால் மசூதியாக இருப்பதால் அதை மாசுபடுத்த விரும்பவில்லை என இராணுவ அதிகாரிகள் பின்னர் தெரிவித்தனர்.

## சட்டசபையை காங்கிரஸ் தொடர்ந்தும் பகிஷ்கரிப்பு

தமிழக சட்டப் பேரவையை காங்கிரஸ் தொடர்ந்து 5ஆம் நாளாக நேற்று முன் தினமும் பகிஷ்கரித்தது. சட்டப்பேரவையில் எதிர்க்கட்சியினர் ஜனநாயக முறையில் செயற்பட உத்தரவாதம் இல்லாததால் தாம் சட்டப்பேரவையை தொடர்ந்து புறக்கணிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

சபைக் காவலரைத் தாக்கியதாக கைது செய்யப்பட்ட மூன்று எம். எல் ஏக்களின் உறுப்பினர் பதவியை இரத்து செய்யலாம் என அண்மையில் சபைத் தலைவரான அமைச்சர் நெடுஞ்செழியன் பேசியுள்ளமை எதிர்க்கட்சிகளுக்குவிடுக்கப்பட்ட நேரடி மிரட்டல் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## விமான விபத்தில் 80 க்கு அதிகமானோர் பலி

[டில்லி]

ஆறு விமானச் சிப்பந்திகள் உட்பட 118 பயணிகளுடன் அவுரங்கபாத் வந்த இந்தியன் ஏயர்லைன்ஸ் நிறுவனத்தின் போயிங் 737 விமானம் விபத்துக்கு உள்ளாகியதில் எண்பதுக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். இந்த விமான நிலையத்திலிருந்து பம்பாய் நோக்கிப் புறப்பட்ட சில நிமிடங்களில் திடீரெனத் தீப்பற்றி விபத்து நேரிட்டது தெரிந்தது.

இந்த விமான விபத்து எவ்வாறு நேரிட்டது என்பது தொடர்பாக முரண்பாடான தகவல்கள் வெளியாகியிருப்பதையடுத்து நீதிவிசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

விமான ஓடுபாதையில் வந்து கொண்டிருந்த ட்றக் ஒன்றுடன் மோதியதால் விபத்து நேரிட்டதாக ஒரு தரப்பும், விமான நிலையத்திலிருந்து ஐந்து கிலோ மீற்றர்களுக்கு அப்பால் உயர் அழுத்த மின்சார வயர் ஒன்றுடன் மோதியதால் விபத்து நேரிட்டதாக மற்றொரு தரப்பும் கூறியுள்ளன.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்குத் தலா ஐந்து லட்சம் ரூபா நட்டஈடாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### யெல்ட்சின் வெற்றி

ரஷ்யாவில் கடந்த ஞாயிறன்று நடந்த கருத்துக் கணிப்பில், அதிபர் பொறிஸ் யெல்ட்சின் வெற்றி பெற்றுவிட்டதாக கூறப்படுகிறது. நம்பிக்கை வாக்கெடுப்பில் யெல்ட்சின் வெற்றி பெற்றுள்ள போதும், பாராளுமன்றத் தேர்தல்கள்ள விரைவில் நடத்துவதற்கு தேவையான வாக்குகளைப் பெற அவர் தவறிவிட்டதாகவே பூர்வாங்க கணிப்பீடுகள் கூறுகின்றன.

# மக்கள் இல்லாத இடத்தில் செஞ்சிலுவை அதிகாரி ஏன்

## பிரட்மன் வீரக்கோன் கேள்வி

இடைக்காட்டில் முன்னர் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோதும் அப்பகுதியில் பொது மக்கள் எவரும் இருக்கவில்லை. இப்பாதைய இராணுவ நடவடிக்கையின் போது ஒரு செஞ்சிலுவைக் குழு அதிகாரி கொல்லப்பட்டார். ஊரடங்கு அமுலில் இருந்த வேளையில் அவர் அப்பகுதியில் என்ன செய்து கொண்டிருந்தார் என்பது தெரியவில்லை இவ்வாறு வாராந்த செய்தியாளர் சந்திப்பில் ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரி

படுத்தப்பட்டது?

பதில்: பாதுகாப்புப் படைகள் தமது பாதுகாப்பு நிலைகளிலிருந்து வெளியேறுவதற்கும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதற்கும் நேரம் சரியாக அமைந்தது. ஒரு நாள் முன்கூட்டி எதையும் அறிவிக்க முடியாது.

கேள்வி: இராணுவ நடவடிக்கையின் முன்னர் ஆகாயத்திலிருந்து துண்டுப் பிரசுரங்கள் போடுவதுதான் வழக்கம்?

பதில்: அப்பகுதியில் குடிமக்கள் இல்லாததால் இராணுவ நடவடிக்கை மேற்

அவர் அப்பகுதியில் என்ன செய்து கொண்டிருந்தார் என்பது தெரியவில்லை.

கேள்வி: அவர்கள் ஊரடங்கு அறிவித்தல் பற்றி எவ்வாறு தெரிந்து கொள்ள முடியும்?

பதில்: பலாலி முகாமில் ஒரு ஒலிபரப்பு நிலையம் உள்ளது.

கேள்வி: வடப்குதியில் மின்சாரம் இல்லை. வடபிரதேசத்துக்கு பற்றரிகளும் எடுத்துச் செல்ல அனுமதியில்லை. இவ்வாறிக்க, அவர்கள் எவ்வாறு றேடியோவைக் கேட்க முடியும்?

## மேதினம் நடத்த மலையகத்தில் இடமில்லை!

மலையகத்தில் மேதினம் நடத்துவதற்கு சில தொழிற் சங்கங்கள் இடம்தேடி அலைவதாகத் தெரிய வருகிறது.

மலையகத்தில் முக்கிய பல நகரங்களில் மேதின விழாவை நடத்துவதற்கு சில தொழிற் சங்கங்கள் முன்கூட்டியே அனுமதி பெற்றுள்ளதால் நுவரெலியா மாவட்டத்தில் இவ்வாறு நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளதாக முக்கிய தொழிற்சங்க பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். இம்முறை மேதினம் மாகாணசபைக்கான பிரசார மேடையாக இருக்கப் போகின்றது என்றும் அவர் கூறினார்.

ஏனைய குழுக்கள் மேதினத்தைக் கொண்டாட முடியாத ஒரு நிலையை ஏற்படுத்தவே இவ்வாறு முன்கூட்டியே இடங்கள் பதிவு செய்யப்பட்டனவோ என்று தொழிற் சங்கம் ஒன்று ஊகம் தெரிவித்தது.

## தொண். நிறுவன லொறியில் பற்றரி கடத்தல்

(கொழும்பு)

வடபகுதிக்கு வந்துகொண்டிருந்த பிரபல தொண்டர் ஸ்தாபன லொறிகளினுள் பற்றரிகள் கடத்திவரப்பட்டது படையினரால் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகி

இருலொறிகளினுள்பொருள்களிடையே இந்த பற்றரிகள் கொண்டுவரப்பட்டன. வவுனியா ஈரற்பெரியகுளம் தடை முகாமில் லொறியை சோதனையிட்ட இராணுவத்தினரால் இது கண்டுபிடிக்கப்

இதன் அடிப்படையில் சிறிலங்கா இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட பச்சிளம் பாலகர்களில் இருந்து தள்ளாடும் வயதிலிருந்த முதியோர்கள் வரை அரசால் படுகொலை செய்யப்படும் போது அவர்கள் 'புலிகளாகவும்' ''பயங்கரவாதிகளாகவும்'' மாறினர். அரச இராணுவம் செய்த, செய்கின்ற அழிவு வேலைகள் யாவற்றிற்கும், 'புலிகளே' பொறுப்பு எனவும் கூறப்பட்டது.

இதேபோன்றே பொலிசாரும், இராணுவத்தினரும் மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் அறிக்கையையும் எதுவித சிந்தனையற்று வெளியிட்டும் வந்தனர். இலங்கையில் அரசிற்கு எதிராக என்ன சம்பவம் இடம் பெற்றாலும் அதற்குக் காரணம் புலிகளே என்ற பதில் அவர்களிடம் ஆயத்தமாகவே இருந்தது. இக்குற்றச்சாட்டில் உள்ள பெரும் ஓட்டைகள் எவையும் பற்றி அவர்கள் எப்பொழுதுமே சிந்திக்கவில்லை.

அதாவது லலித்தின் கொலையுடன் சந்தேகப்படும் இளைஞன் தமிழ் இளைஞனா? சிங்கள இளைஞனா? எனத் தீர்க்கமாக முடிவெடுக்க முடியாத நிலையிலும் விடுதலைப்புலிகளே இக்கொலையைச் செய்தார்கள் எனவும், அவ்விளைஞன் மானிப்பாயைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸ் திணைக்களம் அறிவித்திருந்தது. இதற்கு அவர்கள் கூறிய விளக்கம் அடையாள அட்டை இருந்ததென்பதேயாகும். இது அவர்களின் புதிய விளக்கமுமல்ல, பழைய பல்லவி ஒன்றே.

இங்கு லலித்தின் கொலையை யார் செய்தார்கள்? யார் செய்யவில்லை என்பதல்ல பிரச்சினை. சிறிலங்கா பொலிஸ் திணைக்களம் எவ்வளவு மட்டகரமான அறிக்கைகளை வெளியிடுகின்றது என்பதே முக்கியமானதாகும். இறந்தவர் பக்கத்தில் அடையாள அட்டை கிடந்தது ஆகையினால், அதில் உள்ள பெயர் விலாசம் உடையவரே கொலையைச் செய்தார். இதுவே பொலிசாரின் முடிவு. ஆனால் அவ்அடையாள அட்டை சரியானதா? போலியானதா? உண்மையில் இறந்து கிடந்தவர் பெயர் அதுதானா? அடையாள அட்டையில் உள்ள பெயர் விலாசத்தில் இறந்தவர் போன்று ஒருவர் இருந்தாரா? இல்லையா? என்பது போன்ற அடிப்படை தகவல்கூட அவர்கள் அறியவில்லை.

இதைவிட வேடிக்கையான விடயம் இறந்தவர் புலிகள் தான் என அறிவித்ததாகும். இறந்தவர் யார்? என்பது சரியாக அடையாளம் காணப்படாத நிலையிலும் அவர் புலிதான் எனக் கண்டுபிடித்ததுதான் அவர்களின் திறமையாகும். இது அவர்களின் புலனாய்வுத் திறமையைத் தவிர கற்பனை வளத்தைக் காட்டுவதேயாகும்.

இந்நிலையானது சிங்களவருக்கு தற்பொழுது ஓரளவு புரிந்திருக்கும். இப்பொழுதும் தமிழர் தொடர்பாக சரியான தகவல்கள் கிடைக்காவிட்டாலும் சிங்களவர் பிரச்சினை தொடர்பாக அரசு கூறுவதில் உள்ள உண்மைக்குப் புறம்பானவற்றையும், முரண்பாடானவற்றையும் விளங்கிக் கொள்ள முடியும். இது இன்று சிங்களவருக்கும் அவசியமானதும்கூட. இதனை சிங்களவர் தெளிவாகப் புரிந்து கொள்வார்களேயானால் எதிர் காலத்தில் பல்வேறு பிரச்சினையையும் விளங்கிக் கொள்ள முடியும். அது அவர்களுக்கும், நாட்டிற்கும் நன்மை அளிக்கும்.

# செஞ்சிலுவை அதிகாரி ஏன்

## பிரட்மன் வீரக்கோன் கேள்வி

இடைக்காட்டில் முன்னர் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதும் அப்பகுதியில் பொது மக்கள் எவரும் இருக்கவில்லை. இப்பாதைய இராணுவ நடவடிக்கையின் போது ஒரு செஞ்சிலுவைக் குழு அதிகாரி கொல்லப்பட்டார். ஊரடங்கு அமுலில் இருந்த வேளையில் அவர் அப்பகுதியில் என்ன செய்து கொண்டிருந்தார் என்பது தெரியவில்லை இவ்வாறு வாராந்த செய்தியாளர் சந்திப்பில் ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

செய்தியாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் வருமாறு:

கேள்வி: இடைக்காடு இராணுவ நடவடிக்கையின் நோக்கம் என்ன?

பதில்: விடுதலைப் புலிகளை அப்பகுதியில் இருந்து வெளியே தள்ளி இடத்தை வெளியாக்குவதாகும்.

கேள்வி: ஆனால் ஊரடங்குச் சட்டம் பிற்பகல் 5-30 மணியளவில்தான் அமுல் படுத்தப்பட்டது?

பதில்: பாதுகாப்புப் படைகள் தமது பாதுகாப்பு நிலைகளிலிருந்து வெளியேறுவதற்கும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதற்கும் நேரம் சரியாக அமைந்தது. ஒரு நாள் முன்கூட்டி எதையும் அறிவிக்க முடியாது.

கேள்வி: இராணுவ நடவடிக்கையின் முன்னர் ஆகாயத்திலிருந்து துண்டுப் பிரசுரங்கள் போடுவதுதான் வழக்கம் ?

பதில்: அப்பகுதியில் குடி மக்கள் இல்லாததால் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கேள்வி: நாங்கு[illegible] ....றார்களுக்குச் சனங்கள் இல்லை அப்படித்தானே?

பதில்: ஆம், அங்கு சனங்கள் இல்லை. இடைக்காட்டில் முன்னர் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோதும் அப்பகுதியில் பொது மக்கள் இருக்கவில்லை. இப்போதைய இராணுவ நடவடிக்கையின் போது ஒரு செஞ்சிலுவைக் குழு அதிகாரி கொல்லப்பட்டார். ஊரடங்கு அமுலில் இருந்த வேளையில் அவர் அப்பகுதியில் என்ன செய்து கொண்டிருந்தார் என்பது தெரியவில்லை.

கேள்வி: அவர்கள் ஊரடங்கு அறிவித்தல் பற்றி எவ்வாறு தெரிந்து கொள்ள முடியும்?

பதில்: பலாலி முகாமில் ஒரு ஒலிபரப்பு நிலையம் உள்ளது.

கேள்வி: வடப்குதியில் மின்சாரம் இல்லை. வட பிரதேசத்துக்கு பற்றரிகளும் எடுத்துச் செல்ல அனுமதியில்லை. இவ்வாறிக்க, அவர்கள் எவ்வாறு றேடியோவைக் கேட்க முடியும்?

பதில்: சைக்கிள் டைனமோவின் உதவியைக் கொண்டு றேடியோவைக் கேட்க அவர்களுக்குத் தெரியும். அவர்களைக் கேட்டுப் பாருங்கள். அவர்கள் அதைப் பற்றி விளக்குவார்கள்.

கேள்வி: சைக்கிள் மிதித்துக் கொண்டே றேடியோவைக் கேட்பது நல்ல வழி என்று நீங்கள் கருதுகிறீர்களா?

பதில்: எனக்குத் தெரியாது. இதில் புத்தி நுட்பம் உள்ளது.

சங்கங்கள் இடம்தேடி அலைவதாகத் தெரிய வருகிறது.

மலையகத்தில் முக்கிய பல நகரங்களில் மேதின விழாவை நடத்துவதற்கு சில தொழிற் சங்கங்கள் முன்கூட்டியே அனுமதி பெற்றுள்ளதால் நுவரெலியா மாவட்டத்தில் இவ்வாறு நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளதாக முக்கிய தொழிற்சங்க பிரமுகர் ஒருவர் பிரசார மேடையாக இருக்கப் போகின்றது என்றும் அவர் கூறினார்.

ஏனைய குழுக்கள் மேதினத்தைக் கொண்டாட முடியாத ஒரு நிலையை ஏற்படுத்தவே இவ்வாறு முன்கூட்டியே இடங்கள் பதிவு செய்யப்பட்டனவோ என்று தொழிற் சங்கம் ஒன்று ஊகம் தெரிவித்தது.

## தொண். நிறுவன லொறியில் பற்றரி கடத்தல்

(கொழும்பு)

வடபகுதிக்கு வந்துகொண்டிருந்த பிரபல தொண்டர் ஸ்தாபன லொறிகளினுள் பற்றரிகள் கடத்திவரப்பட்டது படையினரால் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருலொறிகளினுள்பொருள்களிடையே இந்த பற்றரிகள் கொண்டுவரப்பட்டன. வவுனியா ஈரற்பெரியகுளம் தடை முகாமில் லொறியை சோதனையிட்ட இராணுவத்தினரால் இது கண்டுபிடிக்கப்பட்டது.

## என்னுடன் எப்போதும் லலித் போட்டியிட்டதில்லை

### பிரேமதாசா தெரிவிப்பு

(கொழும்பு)

லலித் கொலை தொடர்பாக சற்றேனும் சிந்தியாது எதிரணியினர் என் மீது குற்றஞ் சாட்டுகின்றனர். உண்மை ஒருநாள் வெளிவரும் என ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார். துரதிர்ஷ்டவசமாக கொலை செய்யப்பட்டு விட்ட லலித்திற்கும் எனக்கும் எந்தவிதமான சச்சரவும் இல்லை. எந்தப் போட்டியும் இல்லை. அவர் என்னுடன் எதிலும்போட்டியிட்டதில்லை என்றும், எனினும் எதிர்க்கட்சியினர் சற்றேனும் சிந்திக்காமல் என்னையும் எனது அரசையும் குற்றம் சுமத்துகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ஒரு அப்பாவி மனிதன்மீதுபோலிக் குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றனர். உண்மை ஒருநாள் வெளிவரும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சந்தை விலைவிபரம் (26-04-1993)

### சராசரி சில்லறை விலைகள்

| தொ. இல. | பொருள்கள் | அலகு | திருநெல்வேலி | பெரிய கடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரு. ச. | ரு. ச. | ரு. ச. | ரு. ச. | ரு. ச. | ரு. ச. | ரு. ச. | ரு. ச. |
| 01. | குத்தரிசி | கி.கி | 31.50 | 29.50 | 31.30 | 29.80 | 30.75 | 33.50 | 29.00 | 33.00 |
| 02. | கோதுமை மா | ,, | 14.50 | 13.80 | 13.60 | 13.60 | 13.00 | 14.00 | 12.30 | 13.50 |
| 03. | சீனி | ,, | 41.00 | 39.60 | 40.00 | 40.30 | 41.50 | 38.00 | 40.00 | 42.30 |
| 04. | கத்தரி | ,, | 32.30 | 31.60 | 19.00 | 18.60 | 21.00 | 22.00 | 20.00 | 20.00 |
| 05. | வெண்டி | ,, | 25.60 | 32.30 | 19.30 | 20.60 | 15.00 | 25.00 | 30.60 | 36.60 |
| 06. | பாகல் | ,, | 23.60 | 30.00 | 21.60 | 34.00 | 40.00 | 25.00 | 33.30 | — |
| 07. | புடோல் | ,, | 15.00 | 23.60 | 15.00 | 20.30 | 30.00 | 12.00 | 21.30 | — |
| 08. | பயற்றங்காய் | ,, | 25.30 | 26.00 | 18 60 | 20.60 | 21 00 | 25.00 | 24.60 | 15.00 |
| 09. | தக்காளி | ,, | 29.80 | 42.30 | 24.40 | 40 00 | 31.00 | 38 00 | 30.30 | 22.50 |
| 10. | வாழைக்காய் | ,, | 22.00 | 26.60 | 21.00 | 30.30 | 35.00 | 24.00 | 28 60 | 23.00 |
| 11. | பீற்றூட் | ,, | 12.30 | 24.60 | 16.00 | — | — | 20.00 | — | — |
| 12. | தேங்காய் | ஒன்று | 28.60 | 28.30 | 27.60 | 29.30 | 25.00 | — | 20.50 | 18.00 |
| 13. | பச்சைமிளகாய் | கி.கி | 44.30 | 42.30 | 40.00 | 37.60 | 29.00 | 22.00 | 26.60 | 32.30 |
| 14. | எலுமிச்சை | ,, | 246.60 | 243.30 | 245.00 | 153.30 | 157.50 | 230.00 | 210.00 | 190.00 |
| 15. | வெங்காயம் | ,, | 16.50 | 23.30 | 17.15 | 17.50 | 21.00 | 19.00 | 17.00 | 18.90 |
| 16. | கப்பல் வாழைப்பழம் | ,, | 30.00 | 35.60 | 35.00 | 32.30 | 35.00 | 20.00 | 32.50 | — |
| 17. | இறால் | ,, | 100.00 | 86.60 | 113.30 | 61.60 | 77.50 | — | — | 90.00 |
| 18. | பாரைமீன் | ,, | 200.00 | 151.25 | 140.00 | 98.30 | 137.50 | 91.60 | 83.30 | 146.60 |
| 19. | சிறியமீன் | ,, | 190.00 | 87.50 | 140.00 | 61.10 | 80.00 | 50.00 | 27.30 | 55.00 |
| 20. | முட்டை | ஒன்று | 8.00 | 7.80 | 7.40 | 8.50 | 8.00 | 7.50 | 7.30 | 6.50 |

தகவல்- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்.

## கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கந்தசாமி யசோதரா என்பவரிற்கு யாழ். பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட 'இசைக் கலைமாணி' என்னும் விருதுப்பட்ட சான்றிதழ் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்

## சைவ சித்தாந்த கருத்தரங்கு

(குருநகர்)

யாழ். திருமறைக் கலாமன்ற சைவசித்தாந்த ஆய்வு வட்டக் கருத்தரங்கு இன்று மாலை 4.30 மணிக்கு பிரதான வீதி மன்றக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

''ஈழத்தில் சைவ சித்தாந்தம்'' என்னும் தலைப்பிலான தொடர் உரையின் இறுதியுரையை பேராசிரியர் வண. நீ. மரியசேவியர் அடிகள் நிகழ்த்துவார். (21)

ஈழநாதம்

# தடுப்புக்காவல்கைதிகளுக்கு வாக்குரிமை வேண்டும்

## - பீ. வை. துடாவை

[கொழும்பு]

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் சகல தடுப்புக் காவல் கைதிகளும் மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப் பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப் பட வேண்டும் என்று தென் மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், பொது மக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளருமான பீ. வை. துடாவை தேர்தல் ஆணையாளரைக் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

அவர் தமது கடிதத்தில் மேலும், இந்தக் கைதிகளுக்கு வாக்களிக்கும் உரிமை வழங் கப்படாது போனால் அது அடிப்படை மனித உரிமை களை மீறும் செயலாகும் என் றும் தெரிவித்துள்ளார்.

# சுதந்திர நாடாக அமைய எரித்திரிய மக்கள் தீர்ப்பு

(அஸ்மாரா)

எரித்திரியாசுதந்திரநாடாக வேண்டுமா என நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பில் 95 சதவீதமான எரித்திரியர்கள் சுதந்திரத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. உத்தியோக பூர்வமான முடிவு இன்று அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாக்கெடுப்பின் போது வெளிநாடுகளில் வாழும் எரித்திரியர்கள் பலரும் வாக்களித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை எரித்திரிய சுதந்திர நாடாக பிரகடனம் செய்யப்பட்ட பின்னர் அந்நாட்டின் பிரபல துறைமுக நகரான மசாவாவை அபிவிருத்தி செய்வதே பெரும் பணியாக இருக்கும் எனக் கூறப்படுகிறது. இந்நகர் மூன்று வருடங்களுக்கு முன் சோமாலிய விமானப்படையினால் குண்டுவீசி அழிக்கப்பட்டது.

1990 இல் இத்துறைமுக நகரை எரித்திரிய விடுதலைப் போராளிகள் சோமாலிய இராணுவத்திடமிருந்து கைப்பற்றியதையடுத்து இந்நகரை சோமாலிய விமானப்படை கண்மூடித்தனமாக தாக்கியமை குறிப்பிடத்தக்கது. தற்போது மசாவா துறைமுகம் சிறிய அளவிலேயே செயற்பட்டுவருகிறது.

## பொலிஸ் - ராணுவம் காஷ்மீரில் மூறுகல்

[டில்லி]

காஷ்மீரில் இந்திய பொலிசாருக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் தொடர்ந்து பதற்றநிலை நிலவிவருகிறது. அண்மையில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார். இதை ஆட்சேபித்து பொலிசார் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

பொலிசாரின் இந்த வேலை நிறுத்தத்தை முறியடிக்கும் வகையில் பரா இராணுவம் நேற்று துப்பாக்கிச் சூடு நடத்தியதையடுத்து பதற்றநிலை மேலும் அதிகரித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## மசோதா

(டில்லி)

இந்தியாவில் தடா சட்டத்தை 1995 வரை மேலும் நீடிப்பதற்கான மசோதா நேற்று இராஜ்யசபாவில் மத்திய உள்துறையமைச்சர் எஸ். பி. சவானினால் சமர்ப்பிக்கப்பட்டது.

## தேர்தல் விதிகளை மீறியதாக தமிழக அரசு மீது புகார்

[சென்னை]

பழனி நாடாளுமன்ற இடைத் தேர்தல் சம்பந்தமாகவும் தமிழக அரசு தேர்தல் விதிகளை மீறியுள்ளதா எனக் கண்டறிய தேர்தல் கமிஷன் மாநில அரசிடம் சில விளக்கங்களைக் கோரவுள்ளது இத்தகவலை இந்திய தலைமை தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் நேற்று சென்னையில் தெரிவித்தார். ஏற்கனவே இராணிப்பேட்டை சட்டப்பேரவை இடைத்தேர்தல் தமிழக அரசு தேர்தல் விதிமுறைகளை மீறியதற்காக தேர்தல் கமிஷனினால் ரத்து செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பழனியில் ஆளும் கட்சியினர் மக்களுக்கு இலவச உடை வழங்குவதாகவும். பல அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்துள்ளதாகவும் தி. மு. க., காங்கிரஸ் கட்சியினர் செய்த புகாரின் பேரிலேயே தமிழக அரசிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

## நில்கிரி கப்பல் திட்டமிட்டபடி வரவில்லை

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்பட்ட நில்கிரி கப்பல் வந்து சேரவில்லை என யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

மேற்படி கப்பல் குடாநாட்டுக்கான மண்ணெண்ணெயின் ஒரு தொகுதியை எடுத்துவருகின்றதெனவும், இக் கப்பல் வந்ததும் பங்கீட்டு அட்டைக்கு 2 லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும் எனவும் மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார். (சி)

## கருத்தரங்கு

(நெல்லியடி)

யாழ். மாவட்ட, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவர்கள் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு இன்று பிற்பகல் 2-00 மணிக்கு யாழ். பிராந்திய அலுவலகத்தில் நடைபெற விருப்பதனால், தவறாது அனைவரையும் கலந்து கொள்ளுமாறு, வடபிராந்திய காப்

## ஆசிரியர் தெரிவுக்கான நேர்முகத் தேர்வு

## வீரவணக்க கூட்டம்

4ஆம் மாதங்களில் (ஏப்பிரல்) வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வடமராட்சிக்கோட்டத்தில் கடற்புலிகள் பிரதேசம் தவிர்ந்த பருத்தித்துறை வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 7.30 மணிக்கு புலோலி தெற்கு, வடுவாவத்தை வீரபத்திரர் கோயிலடியில் நடைபெறும்.

பொலிகண்டி சிற்றூர் பொறுப்பாளர் திரு. கி. கதிரவன் தலைமையில் நடைபெறும் இவ் வீரவணக்கக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் நினைவுரைகளை வழங்க, விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகத்தினர் கலை நிகழ்ச்சிகளை வழங்கவுள்ளனர். [90]

✤

வடமராட்சிக் கோட்டத்தில் கரவெட்டி வட்டத்தில் இதுவரைகாலமும் சித்திரைமாதத்தில் வீரச்சாவெய்திய ஏழு மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் நாளை வியாழன் இரவு, துன்னாலை கலிகைக் கந்தன் ஆலய முன்றலில் திரு. கரிகாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் இக் கூட்டத்தில் வடமராட்சி கலைபண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்வும் இடம் பெறும். (30)

## "சத்திய வேள்வி" இசை நாடகம்

(குருநகர்)

இம் மாதம் 30 ஆம் திகதியும் அடுத்த மாதம் 2 ஆம், 3 ஆம் திகதிகளிலும் யாழ். திருமறைக் கலாமன்றம் 'சத்திய வேள்வி' என்னும் இசை நாடகத்தை மேடையேற்ற உள்ளது.

யாழ். பிரதான வீதி மன்றக் கலையரங்கில் தினமும் மாலை 6. 45 மணிக்கு மேடையேறும் நாடக நிகழ்ச்சியை முறையே விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராஜா, பேராசிரியர் அ. சண்முகதாஸ். திருமதி வைரமுத்து ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பர். (21)

## கற்கைநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் செயற்திட்டச் செயல் முறைகள் கற்கைநெறி வரும் சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது

இதற்கான நிகழ்ச்சித் திட்டத்தையும் பாட நெறியையும் தயாரிப்பதற்கு புலமை வளத்

## பேச்சுவார்த்தையையடுத்து மறியல் நிறுத்தம்

(சுன்னாகம்)

கடந்த எட்டுத்தினங்களாக தமக்கு வழங்கப்பட்டுவந்த நிவாரண விநியோகம் நிறுத்தப்பட்டது தொடர்பாக ஏழாலை மத்தி, ஏழாலை கிழக்கு கிராமசேவகர் பிரிவு மக்களால் உடுவில் உதவி அரச அதிபர் பணிமனையின் முன்னால் நடைபெற்றுவந்த மறியற்போர், அரச அதிபருடனான சமரசப் பேச்சினையடுத்து நேற்று முடிவுக்கு வந்தது.

இராணுவ நடவடிக்கைகளினால் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகி வந்த இப்பகுதி மக்களின் நிவாரண விநியோகம் எதுவித காரணமுமின்றி கடந்த பெப்ரவரி மாதம் முதல் நிறுத்தப்பட்டது. இதையடுத்து கடந்த வாரம்முதல் உடுவில் உ. அ. அதிபர் பணிமனையின் முன் மறியற்போர் செய்தபோது' இப்பிரச்சினை அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. மக்கள் பிரதிநிதிகள் நால்வருடன் உடுவில் உ. அ. அதிபர் பிரிவையும் தற்காலிகமாகக் கவனிக்கும் வலி. வடக்கு உ. அ. அதிபர் திரு. சந்திரராசாவும் நேற்று 11.00 மணியளவில் அரச அதிபருடன் கலந்துரையாடினர். இதையடுத்து மறியற்போரைக் கைவிடும்படியும், எதிர்வரும் எட்டுத் தினங்களுக்குள் சாதகமான முடிவொன்றைப் பெற முயற்சிப்பதாகவும் அரச அதிபர் கூறியதையடுத்து மறியற்போர் கைவிடப்பட்டது.

எனினும் சாதகமான முடிவொன்று கிடைக்கப்பெறாவிடின் தொடர்ந்தும் மறியற்போரில் ஈடுபட நேரிடும் என மறியற்போரில் கலந்துகொண்டமக்கள் கூறினர். இம் மறியற்போரில் வயோதிபர்களும், குழந்தைகளும் சுமார் நான்கு மைல் வரை தினமும் நடந்து வந்து கொதிக்கும் வெயிலிலும் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது. (11)

## துப்பாக்கி சூடு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை, அரி

## நிலத்திற்கு அடியிலிருந்து சிசுவின் சடலம் மீட்பு

[தென்மராட்சி]

கைதடி மத்தி குருநகர் என்னும் பகுதியில் பச்சிளம் சிசு ஒன்று நிலத்தில் புதைக்கப்பட்ட நிலையில் இருந்து சாவகச்சேரி தமிழீழ காவல் துறையினரால் மீட்கப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது; பெண்மணி ஒருவர் கடந்த புதன்கிழமை இச்சிசுவை பெற்றதாகவும், பின்பு இப் பெண்மணியே சிசுவை கொலை செய்து சாக்கினுள் இட்டு நிலத்தில் புதைத்ததாகவும் கிடைத்த தகவல்களை அடுத்து காவல் துறையினர் திடீரென அவ்விடம் சென்று சிசுவின் சடலத்தை மீட்டனர் இச்சிசுவின் உடல் சாவகச்சேரி மருத்துவமனையில் கொலையா? இயற்கை மரணமா? என்பதை அறிய ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் காவல்துறையினர் கூறினர் சிசுவின்தாயார் தற்போது காவல்துறையினரின் பாதுகாப்பில் உள்ளார். இது தொடர்பாக விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது குறிப்பிடத்தக்கது. [86]க்

மக்களை

பிக்க வாய்ப்பில்லை என எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்'

அரசியல்

எதிரணியினர் சதி முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் பிரேமதாசா மேலும்தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அட்சயலிங்கம் சரஸ்வதிதேவி

பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி அட்சயலிங்கம் சரஸ்வதிதேவி 26-4-93 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் சிவபதம் அடைந்தார். இவர் வைரமுத்து அட்சயலிங்கம் [இளைப்பாறிய தபால் அதிபர்] அவர்களின் மனைவியும். வசந்தகுமாரி, அட்சயகுமார் [இலங்கை வங்கி, கிளிநொச்சி], உதயகுமார் [பிரான்ஸ்], அனந்தகுமார் [பிரான்ஸ்] விஷ்ணு குமார் [U. K], ஜெய கௌரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவயோகம், சீவரத்தினம் [அவுஸ்ரேலியா], காலஞ்சென்ற சிவபாதம் கதிரமலைராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கந்தசாமி, தவநாயகி [பத்தமேனி, அச்சுவேலி] அவர்களின் அன்பு மாமியும், அஜந்தா, திருமால், அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அமரரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கண்டறிய தேர்தல் கமிஷன் மாநில அரசிடம் சில விளக்கங்களைக் கோரவுள்ளது இத்தகவலை இந்திய தலைமை தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் நேற்று சென்னையில் தெரிவித்தார். ஏற்கனவே இராணிப்பேட்டை சட்டப்பேரவை இடைத்தேர்தல் தமிழக அரசு தேர்தல் விதிமுறைகளை மீறியதற்காக தேர்தல் கமிஷனினால் ரத்து செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பழனியில் ஆளும் கட்சியினர் மக்களுக்கு இலவச உடை வழங்குவதாகவும், பல அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்துள்ளதாகவும் தி. மு. க.,

...வித்தார்.

## நில்கிரி கப்பல் திட்டமிட்டபடி வரவில்லை

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்பட்ட நில்கிரி கப்பல் வந்து சேரவில்லை என யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

மேற்படி கப்பல் குடாநாட்டுக்கான மண்ணெண்ணெயின் ஒரு தொகுதியை எடுத்துவருகின்றதெனவும், இக் கப்பல் வந்ததும் பங்கீட்டு அட்டைக்கு 2 லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும் எனவும் மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார். (சி)

## ஆசிரியர் தெரிவுக்கான நேர்முகத் தேர்வு

மன்னார்/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பணியாற்ற விண்ணப்பித்த கணித/விஞ்ஞான/வர்த்தக/ஆங்கில ஆசிரியர் தெரிவுக்கான நேர்முகத் தேர்வு 03 - 05 - 1993ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள கல்விக் கழக நடுவப் பணியகத்தில் நடைபெறும்.

பின்வரும் ஆவணங்களுடன் சமுகம் கொடுக்கவும்

1. பிறப்பு சான்றிதழ் – (மூலப் பிரதி)
2. கல்வித் தகைமைச் சான்றிதழ் (மூலப்பிரதி)
3. அண்மையில் பெற்ற நற்சான்றிதழ் பத்திரம் இரண்டு
4. அனுபவம் அல்லது மேலதிக தகைமையினை. வெளிப்படுத்தும் பிற சான்றிதழ்கள்

குறிப்பு:-
மேற்படி ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கத் தவறியவர்கள் விரும்பின் மேற்காட்டிய சான்றிதழ்களுடன் அன்றைய தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

பொறுப்பாளர்
தமிழீழ கல்விக் கழகம்
நல்லூர், யாழ்ப்பாணம்

(சி/6521)

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

கிராமிய உழைப்பாளர் சங்கம்
நடாத்தும்
9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

இடம்: கோண்டாவில் குமரன் விளையாட்டுமைதானம்
காலம்: இன்று 28-04-93 புதன்கிழமை ஆரம்பமாகின்றது.

இதில் நான்கு கழகங்கள் மோதவுள்ளன.

❋ அண்ணா உரும்பராய் – அறிவொளி குப்பிளான்

❋ அம்பாள் புங்குடுதீவு – சரஸ்வதி உரும்பராய்

கிராமிய உழைப்பாளர் சங்கம்
யாழ். மாவட்டம்
உரும்பராய்

(சி-6520)

கப்பட்டது.

## கருத்தரங்கு

(நெல்லியடி)

யாழ். மாவட்ட, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு இன்று பிற்பகல் 2-00 மணிக்கு யாழ். பிராந்திய அலுவலகத்தில் நடைபெற விருப்பதனால், தவறாது அனைவரையும் கலந்து கொள்ளுமாறு, வடபிராந்திய காப்புறுதிக் கூட்டுத்தாபன முகாமையாளர் வேண்டிக்கொள்கின்றார்.

ஒவ்வொரு
எண்ணிக்கை 1 கோடிக்கும் 1 கோடி 50 லட்சத்திற்கும் இடைப்பட்டு காணப்படுகின்றது.

நாடுகளில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு விபத்துக்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றன என அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பதவி:
தொழிலாளி தரம் 111-
நிரந்தரம்

மேற்படி பதவிக்கான பொதுவுளச்சார்புப் பரீட்சை யாழ். பல்கலைக் கழகத்தில் 1993.05 02-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறுமெனக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்ட விண்ணப்பதாரிகள் கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய பீடத்தில் மேற்படி பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993.04.26

(சி-6514)

நாடகத்தை மேடையேற்ற உள்ளது.

யாழ். பிரதான வீதி மன்றக் கலையரங்கில் தினமும் மாலை 6. 45 மணிக்கு மேடையேறும் நாடக நிகழ்ச்சியை முறையே விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராஜா, பேராசிரியர் அ சண்முகதாஸ், திருமதி வைரமுத்து ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பர். (21)

### கற்கைநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் செயற்திட்டச் செயல் முறைகள் கற்கைநெறி வரும் சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது

இதற்கான நிகழ்ச்சித் திட்டத்தையும் பாட நெறியையும் தயாரிப்பதற்கு புலமை வளத்தினருடன் கலந்துரையாடல் ஒன்று நாளை மாலை 3 மணிக்கு புவியியல் துறையில் இடம்பெறவுள்ளது.

### விசேட கலந்துரையாடல்

வடமராட்சி பகுதியில் இயங்கும் கழகங்களை உள்ளடக்கி அமைக்கப்பட இருக்கும் வலய உதைபந்தாட்டசபை தொடர்பான ஒரு விசேட கலந்துரையாடல் இன்று பி.ப. 4.00 மணிக்கு பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் பணிமனையில் லீக்தலைவரின் தலைமையில் நடைபெறும். லீக்கில் இணைந்துள்ள மற்றும் இணையாத கழகங்கள் தமது கழகத் தலைவர்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வலய உதைபந்தாட்ட சபையில் இணைப்பதற்கான படிவங்கள்வழங்கப்படவுள்ளதால் அனைத்து விளையாட்டுகழகங்களின் தலைவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

### முகாம் பகுதியில் புகைமண்டலம்

சிறிலங்கா இராணுவம் நிலைகொண்டுள்ள காங்கேசன்துறை, மயிலிட்டி பகுதிகளிலிருந்து புகைமண்டலம் நேற்று வெளியேறியது.

வல்லை வெளியூடாக, பிரயாணத்தை மேற்கொண்டவர்கள் இதனை அவதானிக்க முடிந்தது. இச்சம்பவம் நேற்று காலை 10 30 மணியளவில் நடைபெற்றது. (30)

### ஆய்வுரை

எதிர்வரும் 30-4-93 வெள்ளி மாலை 4-30 மணிக்கு 238 பிரதான வீதியில் அமைந்திருக்கும் திருமறைக் கலாமன்றத்தில் ''இலக்கிய இன்பம்'' என்னும் தலைப்பில் ஓய்வு பெற்ற அதிபர் திரு. கா. கணேசதாசன் அவர்களால் ஆய்வுரை வழங்கப்படவுள்ளது (24)

கலந்துரையாடினர். இதையடுத்து மறியற்போரைக் கைவிடும்படியும், எதிர்வரும் எட்டுத் தினங்களுக்குள் சாதகமான முடிவொன்றைப் பெற முயற்சிப்பதாகவும் அரச அதிபர் கூறியதையடுத்து மறியற்போர் கைவிடப்பட்டது.

எனினும் சாதகமான முடிவொன்று கிடைக்கப்பெறாவிடின் தொடர்ந்தும் மறியற்போரில் ஈடுபட நேரிடும் என மறியற்போரில் கலந்து கொண்டமக்கள் கூறினர். இம் மறியற்போரில் வயோதிபர்களும், குழந்தைகளும் சுமார்

## துப்பாக்கி சூடு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை, அரியாலை கடற்பகுதியில் நேற்றுக் காலை மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் மீது பூநகரி, கல்முனை, பூவரசம் தீவு சிறிலங்கா இராணுவ முகாமிலிருக்கும் இராணுவத்தினர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் மீனவர்கள்தொழிலைக் கைவிட்டு தமது வலைகளையும் கடலில் கைவிட்டு விட்டு நீந்திக் கரை திரும்பியதாக மீனவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (24)

### திருமதி லலித்தின் பிறந்ததினம்

(கொழும்பு)

திருமதி லலித்தின் பிறந்த தினம் நேற்றாகும் என நேற்று பி. பி. ஸி. செய்தி வெளியிட்டது.

ஸ்கொட்லண்ட்யார்ட்
நடைபெறும்.

இதனிடையே லலித் படுகொலை செய்யப்பட்ட கிருலப்பனை கூட்டம் தொடர்பாக எடுக்கப்பட்ட வீடியோ படம் நீதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது விசாரணைகள் முடியும் வரை அதனை பாதுகாக்குமாறு அரச சட்டத்தரணி நீதிமன்றை கோரியுள்ளார்.

திருமலை
ரமாக்கப்பட்டு வருவதாகவும் அதற்குப் பௌத்த மத குருமார் தீவிரமாக உகவி வருவதாகவும் கூறப்படுகின்றது.

திருமலை - கொழும்பு பெருந்தெருவெங்கும் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு வருவதாகவும், இவற்றைச் சுற்றி சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. கந்தளாய், தம்பலகமம், குச்சவெளி, நாலாம் கட்டை, 96-ம் கட்டை, முள்ளிப்பொத்தானைப் பகுதிகளிலும் குடியேற்றங்கள் நிகழ்த்தப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அட்சயலிங்கம் சரஸ்வதிதேவி

பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி அட்சயலிங்கம் சரஸ்வதிதேவி 26-4-93 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் சிவபதம் அடைந்தார். இவர் வைரமுத்து அட்சயலிங்கம் [இளைப்பாறிய தபால் அதிபர்] அவர்களின் மனைவியும். வசந்தகுமாரி, அட்சயகுமார் [இலங்கை வங்கி, கிளிநொச்சி], உதயகுமார் [பிரான்ஸ்], அனந்தகுமார் [பிரான்ஸ்] விஷ்ணுகுமார் [U. K], ஜெயகௌரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவயோகம், சீவரத்தினம் [அவுஸ்ரேலியா], காலஞ்சென்ற சிவபாதம் கதிரமலைராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கந்தசாமி, தவநாயகி [பத்தமேனி, அச்சுவேலி] அவர்களின் அன்பு மாமியும், அஜந்தா, திருமால், அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அமரரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவன்
வை. அட்சயலிங்கம்
இளைப்பாறிய தபால் அதிபர்

[4778]

### முருகேசு பேரம்பலம்

காரைநகர் பலகாடு, ஐயனார் கோவிலடியைச் சேர்ந்தவரும். முன்னை நாள் பதுளை பிரபல வர்த்தகருமான முருகேசு பேரம்பலம் (முருகேசு ஸ்ரோஸ் 243, லோவர் வீதி, பதுளை.) 22-4-93 வியாழக்கிழமை அன்று கொழும்பில் காலமானார். இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், மகேந்திரன் (வர்த்தகர்), பாலேந்திரன், கண்ணி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தகுமாரியின் அன்பு மாமனாரும், தஜிவனின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-4-93 சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
பே. மகேந்திரன்
(மகன்)

தாமோதரம்பிள்ளை,
டச்சு வீதி,
தொல்புரம்.

(4781)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 27-04-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9194

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-9501, 27-5197, 41-9895, 26-5206, 28-3439, 27-5775, 27 6583, 28·8367, 28-6996, 26-3046, 26-8382, 41-9111, 28-6853, 28-1730, 42-0962.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-6511, 26-4657, 26·4792, 28-3476, 24·9856, 24-6336, 24-4467, 42-9220. 28-2212, 42-5556, 41-9746, 24-0523, 24-1250, 24-5437, 28-3029, 40-1516, 42-3114, 26-4281, 27-8515, 26-0767, 26-9797, 27-8879, 27-6769, 24-3258, 42-2157.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.